| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | தேனி | காலம் : | 26/06/2024 | முதல் | 30/06/2024 |
| | அறிக்கை எண் : | 051/ 2024 | வெளியீட்டு நாள் : | | 25/06/2024 | |

### தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (20.06.2024 முதல் 24.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 30-06-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20/06 | 21/06 | 22/06 | 23/06 | 24/06 | தேதி | நாள்-1 26/06 | நாள்-2 27/06 | நாள்-3 28/06 | நாள்-4 29/06 | நாள்-5 30/06 |
| 0.8 | 1.0 | 2.2 | 3.2 | 4.5 | மழை (மி.மீ) | 26 | 25 | 10 | 4 | 0 |
| 37 | 38 | 35 | 39 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 31 | 31 | 30 | 30 |
| 26 | 25 | 25 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 21 | 21 | 20 | 20 |
| 6 | 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 8 | 7 | 5 |
| 70 | 65 | 64 | 61 | 64 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 80 | 70 | 70 |
| 52 | 56 | 55 | 60 | 57 | | 70 | 60 | 50 | 50 | 40 |
| 4 | 10 | 8 | 8 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 12 | 10 | 12 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 26, 27, 28 தேதி மிதமான மழையும் மற்றும் 29 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 30°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (28 ஜூன் - 04 ஜூலை 2024):**

### மழைப்பொழிவு :

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 26, 27 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**விவசாயம் :**

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : பப்பாளி, கரும்பு, கால்நடை.**

**பப்பாளி:**

பப்பாளி பழப் பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈதாக்குதலின் காரணமாக இவற்றின் இளம் பூச்சிகள் மற்றும் வண்டுகள் இலையின் அடிப்புறத்திலிருந்து சாற்றை உறிஞ்சும் மேலும் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்.

இதனைக் கட்டுப்படுத்த செடியின் உயரத்திற்கேற்ப ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டையினை கட்டி விடவும்.

மேலும் 250 கிராம் பச்சைமிளகாய்> 250 கிராம் பூண்டு மற்றும் 100 கிராம் இஞ்சி ஆகியவற்றை நன்கு அரைத்து அதனை மூன்று லிட்டர் தண்ணீரில் நன்கு கலந்து இரவு முழுவதும் ஊறவைத்து (3ஜி) கரைசல் தயாரிக்கவும்.

இந்த கரைசலில் இருந்து 300 மில்லி எடுத்து அதனுடன் 40 கிராம் சூடோமோனாஸ்> 20 மில்லி கோழி முட்டையின் வெள்ளைக்கரு இவற்றுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**கரும்பு:**

கரும்புக் பயிரில் மணிச்சத்து பற்றாக்குறையானது பரவலாக தென்படுகின்றது. சத்துப் பற்றாக்குறையின் அறிகுறியாக இலைகளின் நிறம் பசுமை கலந்த நீல நிறமாகவும், இலை குறுகியும் காணப்படும்.

விடுதல் குறைகிறது, வேரின் வளர்ச்சியும் தடை செய்யப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்ய ஒரு ஹெக்டேருக்கு 1 டன் ராக்பாஸ்பேட் உரத்தினை இடலாம். மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20கிராம் என்ற அளவில் டைஅமோனியம் பாஸ்பேட் (டிஏபி) உரத்தினை கலந்து 15 நாள் இடைவெளியில் இலைமேல் தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கால்நடைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பான் நோயானது பெரும்பாலும் மழைக் காலங்களிலேயே மிகுதியாக காணப்படுகிறது. கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இந்நோய் தாக்கிய கால்நடைகளுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதுடன தலை, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற பகுதிகளில் வீக்கமும் ஏற்படும்.

இந்த நோயின் கிருமிகள் ஈரப்பதமான மற்றும் நீர் நிறைந்த நிலைமைகளில் நீண்ட காலம் உயிர்வாழும்.

இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம் ஆகும்.